**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.57/2024 தேதி- 04.02.2026
(D.W.1) - ஸ்டாலின்

<u>குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கின் வாதி என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பிரதிவாதி என்னுடைய சகோதரரி என்றால் சரிதான். என் அப்பா கடந்த 2011 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் சகோதரியின் திருமணம் என் அப்பா உயிரோடு இருந்த போது கருங்கல் சர்வே எண்.600/12A -ல் 5 சென்ட் சொத்தை விலைக்கு கொடுத்து தான் திருமணம் நடத்தப்பட்டது என்றால் சரிதான். என் சகோதரியின் திருமணத்தின் போது கருங்கல் கிராமம் சர்வே எண்.604/4 ல் 1 சென்ட் சொத்தை கொடுப்பதாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றால் சரிதான். என் அப்பாவின் இறப்புக்கு பிறகு இவ்வழக்கின் வாதி, பிரதிவாதி நானும், என் சகோதரர் வடிவேலும் சேர்ந்து 2014 ஆம் ஆண்டில் ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் வா.சா.ஆ.1 ஆவணமாக இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தான் மேற்சொன்ன 1 சென்ட் சொத்தை என் சகோதரிக்கு எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான்.

2. மேற்சொன்ன 1 சென்ட் சொத்து கருங்கல் முதல் புதுக்கடை பிரதான சாலையை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 2014 பாக பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றாலும் வரைபடமும் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் பட்டிகை சொத்தான 1.186 சென்ட் சொத்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் 1 சென்ட் சொத்தின் தெற்கு பக்கம் 1.40 செ.மீ சொத்து என்று வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதாவது 4 1/4 அடி அளவு ஆகும். மேற்சொன்ன வழிப்பாதை வாதியின் சொத்திற்கும் வடிவேல் சொத்திற்கும் தெற்கு பக்கம் 1 மீட்டர் வீதம் கொண்டு என் சொத்து வரை செல்கிறது என்றால் சரிதான். தற்போது மேற்சொன்ன வழிப்பாதை அதே அளவில் உள்ளதா என்றால் அதே அளவில் தான் உள்ளது. வாதியின் சொத்தின் கிழக்கு பக்கம் 1.40 செ.மீ அளவிலும் , மேற்கு பக்கம் 70 செ.மீ அளவு தான் தற்போது உள்ளது என்றாலும் பிரதிவாதி ஆக்கிரமித்து

காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. 2018 ஆம் ஆண்டு நானும், பிரதிவாதியின் கணவரும் வாதியை  தாக்கியதா கருங்கல் காவல் நிலையத்தில் குற்ற எண்.413/2018 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் வழக்கு பதிவு செய்யப்பட்டது ஆனால் அது பொய் வழக்காகும். மேற்சொன்ன வழக்கு வழிப்பாதை பிரச்சனை சம்மந்தமாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

3. வழக்கு வேண்டி நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பிரதிவாதி ஆக்கிரமித்து சுவர் அமைக்க முயன்ற போது அதை வாதி தடுத்தபோது தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் இவ்வழக்கின் வாதிக்கும் எவ்வித பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் சரிதான். சொத்து பிரச்சனை சம்மந்தமாக எனக்கு, வாதிக்கும் முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் இல்லை. என்கும் வாதிக்கும் முன்விரோதம் இருப்பதால் தான் வாதிக்கு எதிராக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பட்டிகை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள வழி பாதை வழியாக தான் நான் என் வீட்டிற்கு சென்று வர முடியும் என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும், என் சகோதரர் வடிவேலுக்கும் தான் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழிப்பாதையை அனுபவிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு இந்த வழிப்பாதையில் எந்த அவகாசமும் இல்லை. இவ்வழக்கில் வாதி வழக்கை தாக்கல் செய்த விவரம் தெரிந்தும் நான் இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வாதிக்கு ஒதுக்கப்பட்ட 1/2 சென்ட் சொத்தில் ஒர்க் ஷாப் வைத்துள்ளார் என்றால் சரிதான். வாதியின் ஒரக் ஷாப்க்கு பழுது பார்க்க கொண்டு வரப்படும் இருசக்கர வாகனங்களை நிறுத்தி வைக்க பின்புறம் உள்ள 1 சென்ட்  சொத்தில் நிறுத்தி வைப்பார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பிரதிவாதி வாதி அனுபவிக்க கூடாது என்று காம்பவுண்ட் சுவர் அமைத்து ஆக்கிரமித்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் மீதுள்ள முன்விரோதமாக நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.